

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.5.2025) சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ராயப்பேட்டை, பைகிராப்ட்ஸ் சாலையில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் சார்பில் 12.37 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 3 தளங்களுடன் கூடிய பல்நோக்கு மையம், 1.87 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருவல்லிக்கேணி ஜானி பாட்ஷா தெருவில் முதல்வர் படைப்பகம் மற்றும் நவீன நூலகம், பாரதிசாலையில் 1.37 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முதல்வர் படைப்பகம் மற்றும் நவீன நூலகம் கட்டும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மண்டலக்குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், வீட்டு வசதி மற்றும் நகர்புர வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. காகர்லா உஷா, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலாளர் சு.பிரபாகர், மாமன்ற உறுப்பினர் சி.சிவராஜ சேகரன் உள்பட மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.5.2025) சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அருள்மிகு பார்த்தசாரதி திருக்கோயில் அருகில் 3.22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 12 குடியிருப்புகள் கொண்ட புதிய கட்டடத்தினை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மண்டலக்குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர் டாக்டர்.சி.பழனி, மாமன்ற ஆளும்கட்சி துணைத்தலைவர் ஏ.ஆர்.பி.எம். காமராஜ் உள்பட அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உடனிருந்தனர்.

## ரோமன் கத்தோலிக்க திருச்சபையை வழிநடத்த தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள

# புதிய போப் பதினான்காம் லியோவுக்கு வாழ்த்து!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, மே 10–

புதிய போப் பதினான்காம் லியோ அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வாழ்த்து செய்தி வெளியிட்டுள்ளார்.

முதல்வர் அவர்கள் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:–

ரோமன் கத்தோலிக்க திருச்சபையை வழிநடத்த தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திருத்தந்தை போப் பதினான்காம் லியோ அவர்களுக்கு வாழ்த்துகள்.

அமைதி மற்றும் ஒற்றுமை குறித்த அவரது செய்தி, உலகம் முழுவதும் நல்லிணக்கத்தை உருவாக்கட்டும்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## முதல்வர் மு.க.ஸ்டாலினின் 4 ஆண்டு கால சாதனை ஆட்சி

# அரசு ஊழியர்கள் - ஆசிரியர்களின் பொற்காலம்!

## தமிழ்நாடு அரசு ஊழியர்கள் – ஆசிரியர்கள் கூட்டமைப்புத் தலைவர் சா.அருணன் பெருமிதம்!

சென்னை, மே 10

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் எப்படி அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் காவலராக திகழ்ந்தாரோ அதே வடிவில் தான் காவலராக திகழ்ந்தாரோ அதே வடிவில் தான் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திகழ்கிறார் அதற்கு உதாரணங்கள் சில சென்ற அதிமுக ஆட்சி யில் அரசு ஊழியர்கள்.

ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி போராட்டங்கள் நடத்தினோம் செவி கொடுக்கவில்லை அ.தி.மு.க. அரசு குறிப்பாக புதிய பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதி யம் கொண்டுவர காலவரையற்ற வேலை நிறுத்தில் ஈடுபட்ட அரசு ஊழியர்கள் ஆசிரியர்களை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தாமல் வஞ்சித்து பணியிடை நீக்கம் செய்து சிறையில் அடைத்தது அ.தி.மு.க. அரசு அப்போது நாங்கள் அழைக்காமலேயே போராட்டத்திற்கு ஆதரவளித்து எங்களுக்காக அரசிற்கு அழுத்தம் கொடுத்து பணியிடை நீக்கம் மற் றும் துறைரீதியான நட வடிக்கைகளை ரத்து செய்ய உதவினார்.

அதேபோன்று ஒவ்வொரு போராட்டங்களில் நாங்கள் அழைக்காமலேயே போராட்ட களத்திற்கே நேரடியாக வந்து நீங்கள் உங்களை வருத்திக்கொள்ளாதீர்கள் நான் ஆட்சிக்கு வந்தவுடன் உங்கள் கோரிக்கைகள் அனைத்தும் படிப்படியாக நிறைவேற்றி தருகிறேன் என சூளுரை ஆற்றி தேர்தல் அறிக்கையிலும் இடம்பெற செய்தார்.

2021ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த நேரம் கொரோனா பெரும் தொற்று நிதிநிலை பற்றாக்குறை இருந்த போதிலும் நிதிநிலை சரியாக சரியாக அரசு ஊழியர்கள் கோரிக்



கைகள் படிப்படியாக நிறைவேற்றுவேன் என அறிவித்து படிப்படியாக நிறைவேற்றி வருபவர் தான் நம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் , போராட்டம் என்றாலே கைது துறைரீதியான நடவடிக்கை பணியிடை நீக்கம் பணியிட மாற்றம் என்ற காலம் போய், சென்ற பத்தாண்டு கால ஆட்சியில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு தலைமை செயலகத்தில் முதலமைச்சர் அறை எந்த திசையில் இருந்தது என்று தெரியாத நிலை ஆனால் கடந்த நான்கு ஆண்டுகால ஆட்சியில் போராட்ட அறிப்பாக இருந்தாலும் கோரிக்கைகளாக இருந்தாலும் அழைத்து பேசுகின்ற முதலமைச்சர் தான் நம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

மேலும் அரசு ஊழியர்களின் நீண்ட ஆண்டுகால எதிர்கால வாழ்வாதார கோரிக்கையான புதிய பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதிய திட்டத்தை கொண்டுவருவது குறித்து மூவர் குழு அமைக்கப்பட்டு வரும் டிசம்பர் மாதம் அறிக்கை அளிக்க உத்தரவு பிறப்பித்த நிலையில் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு உட்பட பல அமைப்பின் கோலிக்கையை ஏற்றும் வரும் செப்டம்பர் 30ம் தேதிக்குள் அறிக்கை அளிக்க உத்தவிட்டுள்ளார் அதாவது புதிய பங்களிப்பு ஓய்வூதியம் , பழைய ஓய்வூதியம், ஒருங்கிணைந்த ஓய்வூதியம் இதில் எது சிறந்தது ஆராய்ந்து அறிக்கை அளிக்க அறிவுறுத்தியுள்ளார்.

### சொல்லாததையும் செய்து உள்ள முதலமைச்சர்!

பெண் அரசு ஊழியர் ஆசிரியர்கள் மகப்பேறு காலத்தில் பதவி உயர்வு பெற காலத்தாமதம் ஆவதை கருத்தில் கொண்டு மகப்பேறு விடுமுறை காலத்தையும் தகுதிக்கான பருத்தோடு சேர்த்து பதவி உயர்க்கு எடுத்துக் கொள்வதற்கான ஆணை வழங்குயிள்ளார் , அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் பிள்ளகள் மேற்படிப்பிற்கு வழங்கப்பட்டு வரும் முன் பண கடன் தொகையை கலை அறிவியல் கல்லூரிகள் பாலிட்டெக்னிக் கல்லூரிகளில் சேர ரூ.50,000, பொறியல் கல்லூரி உள்ளிட்ட மேற்படிப்பிற்கு ரு ஒரு லட்சமும் வழங்க உத்தரவு , அரசு பெண் ஊழியர் திருமண முன் பண கடன் ரூ. 10 ஆயிரம் ஆண் அரசு ஊழியர் ஆசிரியர் முன்பு ரூ. 5 ஆயிரம் என்ற இருப்பதை பல மடங்கு உயர்த்தி ரூ. 5 லட்சமாக உயர்த்தியவர் தான் நம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் , ஓய்வூதியர்களுக்கு வழங்கப்பட்டு வந்த பண்டிகை கால. பரிசு ரூ.500 / ல் இருந்து ரூ. 1000/ மாக உயர்த்தி வழங்கி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

மேலும் ஓய்வூதியர்களுக்கான பண்டிகை கால முன் பண கடன் ரூ.4000/ த்தை ரூ 6000/ மாக வழங்கி உத்தரவிட்டுள்ளவர் தான் நம் முதலமைச்சர் அதோடு நின்று விட்டதா அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டு வரும் பண்டிகை கால முன் பணம் ரூ 10 ஆயிரத்தில் இருந்து இரு மடங்காக உயர்த்தி ரூ 20 ஆயிரம் வழங்கி உத்தரவு பிறப்பித்து எப்படி முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் காவலராக திகழ்ந்தாரோ அதே வடிவில் தான் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திகழ்கிறார் என்பதற்கு பொன்னான நான்கு ஆண்டு கால சமத்துவ அதற்கு சாட்சி .

முதலமைச்சர் தலைமையில் தமிழ்நாடு போராடும், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் தமிழ்நாடு வெல்லும்.

இவ்வாறு சா.அருணன் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலை! எம்.கிருஷ்ணமூர்த்தி தலைமையில்

# சைதை மேற்கில் நாடு போற்றும் கழக அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம்!

## டி.கே.எஸ்.இளங்கோவன் – தமிழச்சி தங்கபாண்டியன் – மு.மகேஷ்குமார் சிறப்புரை!

சென்னை, மே 10

சென்னை தெற்கு மாவட்டம் - சைதை மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் நாடு போற்றும் நான்கு ஆண்டு தொடரட்டும் இது பல்லாண்டு! சாதனைகளை விளக்கி மாபெரும் பொதுக் கூட்டம் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலையிலும், சைதை மேற்கு பகுதி கழக செயலாளரும், பத்தாவது மண்டலகுழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி தலைமையிலும், மேற்கு சைதாப்பேட்டை, சாரதி நகர் பேருந்து நிலையம் அருகில் நாளை (11.05.2025 ஞாயிற்றுக்கிழமை) மாலை 6 மணியளவில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் ச.அரவிந்தரமேஷ், காரம்பாக்கம் க.கணபதி, ஏஎம்வி.பிரபாகர்ராஜா, ஆகியோர் கழக அரசின் சாதனைகளை எடுத்துரைத்து சிறப்புரையாற்ற உள்ளனர்.

சைதை கிழக்கு பகுதி கழக செயலாளரும், பதிமூன்றாவது மண்டல குழு தலைவர் இரா.துரைராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன், பகுதி கழக நிர்வாகிகள் களக்காடிஎல்லப்பன், த.சம்பத், ஆர்.ரமேஷ், கவிதா கௌதமன், மாநில துணை செயலாளர் எம்.எஸ்.ஹரி பாபு, மாவட்ட அமைப்பாளர் சைதைசாதிக், வட்டகழக செயலாளர்கள் சை.மு.சேகர், அட்கோகமலநாதன், ந.தமிழரசு, எஸ்.பி.கோதண்டம், எம்.நாகா, ஆகியோர் வரவேற்பில், நடைபெறும் இக்கூட்டத்திற்கு மாவட்ட - மாநில கழக நிர்வாகிகள், எஸ்.குணசேகரன்,

முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் கே.எஸ்.ரவிச்சந்திரன், க.தனசேகரன், பாலவாக்கம் க.சோமு, வேளச்சேரி பி.மணிமாறன், காசிமுத்துமாணிக்கம், பாலவாக்கம் விஸ்வநாதன், பாலவாக்கம் மனோகரன், வேளச்சேரி பாஸ்கர், வாசு கொண்டியன், பகுதி ஒன்றிய கழக செயலாளர்கள் கே.கண்ணன், மு.இராசா, எஸ்.வி.ரவிச்சந்திரன், வி.இ.மதியழகன், சு.சேகர், துரைகபிலன், வே.ராஜன், ஜி.வெங்கடேசன், அ.ம.துரை வீரமணி, மாநில துணை செயலாளர்கள் - பொதுக்குழு உறுப்பினர்கள் ரத்னா லோகேஸ்வரன், மின்னல் கந்தப்பன், மேடவாக்கம் ரவி, எம்.கே.ஏழுமலை, உ.துரைராஜ், எஸ்.டி.தங்கராஜ், பி.எஸ்.முருகேசன், எஸ்.அரிகிருஷ்ணன், ரா. பாலசுந்தரம், பி.ஜே.பாஸ்கர், வ.செல்வகுமார்,

த. பஷீர், வீர.கனிமொழி, மாவட்ட அமைப்பாளர்கள் நா.மணிகண்டன், அஞ்சல்ராமன், கோ.பாஸ்கரன், ப.அருண்குமார், வே.ஆனந்தம், சி.பரிமேலழகர், த. ரமேஷ், ம.பார்த்திபன், சி.சுரேஷ், ஆர்.சசிகுமார், குமரேசன், வி.ராஜேஷ், கனிமொழி, நிஷாசையத், ஜெகதீசன், டாக்டர் அனிஷ், முகேஷ்கண்ணன், ஜெயச்சந்திரன், அருள், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஆர்.கிருஷ்ணகுமார், கோட்டூர் எஸ்.பிரகாஷ், எம்.விநாயகமூர்த்தி, சங்கர்கணேஷ், பாண்டியன், தியாகராஜன், ரவி,

சைதை கிழக்கு பகுதி - வட்ட கழக நிர்வாகிகள் இ.முருகேசன், ஆர்.ராஜ்குமார், மு.ஆரோக்கியம், ஆர். அருணகிரி, மு.பாக்கிய லட்சுமி, தா.மோகன்குமார், நா.ராதாகிருஷ்ணன், எல். ஆரோக்கியராஜ், கோட்டூர் மணி, கோட்டூர்சண்முகம், எஸ்.பாட்சா, எஸ்.ஆர்.செந்தில், ஆ.வரதன்,

சைதை மேற்கு - கிழக்கு மாவட்ட பிரதிநிதிகள் கு.புகழ்வேந்தன், டி.என். சிவமணி, பால்கார்ரவி, பொன்ஜெய்சிங், ஜி.கே. ராமச்சந்திரன், வீ.மதிவாணன், ஆர்.ரவி, ஜி.பாபு, நரசிம்மன், முருகன், சேகர், நந்தகோபால், ராதாகிருஷ்ணன், எஸ்.ஜே.சலாம், சுதாபிரியன், பாபு, முகேஷ், கணேசன், செல்வராஜ், ரமேஷ்குமார், ஏ.மஜீத், எஸ்.ரவி, தலைமை கழக பேச்சாளர்கள் ஒப்பில்லாமணி, ஏ.எஸ்.பழனி, ஈகை தனசேகரன், ஆட்டோ பாஸ்கர், மு.அஜிம், இளைஞர் அணி நிர்வாகிகள் ஜிம் பிரபு, ம.சுகுமார், க.தீபன், இரா.சத்யா, இரா.வெங்கடேசன், பரத்குமார், அருண், கொடிபாலா, குணா, கோகுலன், அருண்குமார், ராஜன், ராஜாசம்பத்,

அணிகளின் துணை அமைப்பாளர்கள் எம்.எஸ். மணி, ஏ.சந்தோஷ், ரவிச்சந்திரன், சம்மந்தம், ஆட்டோ தியாகு, கார்த்திகேயன், ஸ்ரீதர், கேபிள்காளி, ராஜ்குமார், த.மணி, கே.தாஸ், தீனதயாளன், தமீம்அன்சாரி, புருசோத்தமன், தினகர், ஆர்ட்ஸ்குமார், எம். மாறன், கே.பிரபு, பிரஸ் கார்த்திக், வெ.கிஷோர்குமார், துரைராஜ், சிற்றரசு, நரேஷ்குமார், ரவீந்திரகுமார், ஸ்டாலின், மதிவாணன், தமிழ்வேல், ஸ்டெல்லாமேரி, செல்வி, ராஜேஸ்வரி, செண்பகம், சுந்தரி, செல்வராணி, அணிகளின் பகுதி அமைப்பாளர்கள் ஆர்.எஸ்.ரமேஷ், ஜி. ஜெ.மோசஸ், கற்பகம், கார்த்திக், மல்லிகா, கோயில்மணி, ஆட்டோ ஜான், சார்ப்சரவணன், வைரவமூர்த்தி, இராபாபு, பிடிசி.குமார், பூ.பாஸ்கர், ஜெயராமன், தனசேகரன், கோகுல்குமார், மாரியப்பன், விக்னேஷ், விவேக்செல்வம், டாக்டர். துரைராஜ், டாக்டர் ஜீவபிரபாகரன்,

வட்டகழக நிர்வாகிகள், ஆர்பர்முனுசாமி, ஷாகுல்அமீது, கேபிள்முருகன், கதிர், ஆர்.கோபி, கே.முருகேசன், காந்தி, மோகன், விஜய், சேக்தாவூத், பழனிபாரதி, வீடியோஎழில், ஆர்.எல். காந்தன், தேவிகா, பாலாஜி, ஆம்பூர்ரவி, வரதராஜன், பாரதிபாஸ்கர், பிரபு, கதிரவன், பரத்குமார், முருகன், சாந்திசுந்தரம், அயாத் பாஷா, சுப்பிரமணி, காசிநாதன், சபரி, முரளி, சந்திரன், வரதன், ஏழுமலை, பிரகாஷ், சுமதி, பூபதிவெங்கடேசன், ஏழுமலை, கொடிசுரேஷ், கோபாலகிருஷ்ணன், முகமதுஅலி, ராஜேஷ், பிரஸ் மணி, லால்மனோகர், ஆனந்தன், வளர்மதி, வீரமணி, கவிராஜ், பன்னீர் செல்வம், ஞானம், பாண்டுரங்கன், மனோகரன், ஜெகநாதன், தென்றல்தினேஷ், கௌரி, பஷீர், சரவணன், கமல்சங்கர், துளசி, விஜயகுமார் உள்ளிட்ட கழக தோழர்கள், பெருந்திரளாக பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர்.

இக்கூட்டத்தின் நிறைவாக பகுதி பொருளாளர் வி.பி.ஜானகிராமன் நன்றி கூற உள்ளார்.

## ஜி.தம்பு தலைமை! நாடு போற்றும் நான்காண்டு– தொடரட்டும் பல்லாண்டு!

# அச்சிறுபாக்கம் வடக்கு ஒன்றியத்தில் சாதனை விளக்க பொதுக்கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. – ஏ.எஸ்.பழனி சிறப்புரை!

காஞ்சிபுரம், மே.10,

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், அச்சிறுப்பாக்கம் வடக்கு ஒன்றியக் கழகம் சார்பில் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நாடு போற்றும் நான்காண்டு, தொடரட்டும் பல்லாண் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் நாளை (11.5.2025-ஞாயிற்றுக் கிழமை) மாலை 5 மணிக்கு கிளியாநகர் ஊராட்சியில் நடைபெறுகின்றது.

கூட்டத்திற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ஜி.தம்பு தலைமை வகிக்கிறார்.

ஜி.சிவபெருமான், இ. வேலாயுதம், டி.நிர்மலாதசரதன், டி.பிரேம் ராஜ், ஆர். வி.ராஜகோபால், எம்.எஸ். வெங்கடேசன், பி.தாஸ், எம்.சாமந்தி, இ.சேகர், எஸ். மனோகரன், கே.வெங்கடேசன், எஸ்.மீனாட்சி சுந்தரம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். வி.தேவ் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

இக் கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் க. சுந்தர், ஜி.செல்வம் எம்.பி., தலைமைக் கழகப் பேச்சாளர் ஏ.எஸ்.பழனி ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

மேலும் இக் கூட்டத்தில் எம்.டி.ஆர்.சாராதிமணிமாறன், டி.ஆர்.நாராயணன், கே.விஜயலட்சுமி கருணாகரன், சு.கலியுககண்ணன், மொ.கோ. மணி, கே. வேணு, கே.பிரபா கரன், டி.பத்மா, சி.இளங்கோ, எஸ்.மாலதி, பெ.ராமதாஸ், செ.சிலம்பரசன், எஸ்.பாண்டுரங்கன், பி.தசரதன், பி. அரி, வி.இரவி, ஆர்.ஏழுமலை, ஆர்.சுப்பிரமணியன், கே.அரவிந்த், ஆர்.அலிசாகன், வி.தணிகைமலை, பி. எம்.சீனிவாசன், வி.குருநாதன், ஆர்.ஸ்ரீகாந்த், கே.இரமேஷ், டி.வெங்கடேசன், ஆர்.விஜயன், எம். சிவபழனி, பி.தங்கராஜ், டி.முனுசாமி, பி.மணி, எஸ். முரளி, வி.கே. ரங்கநாதன், ஏ.எம்.ஆர்.ராமச்சந்திரன், கே.நேச மணி, சி.வஸ்வநாதன், மாரிமுத்து, வி.சீனிவாசன், எம்.மோகன், மு. ஜெகத்ரட்சகன், ர.மேனகா, தி. எல்லம்மாள், ந.மகாலட்சுமி, மு.தங்கம்மாள், து. கனகா, சு.இராஜாசாரம், க.ஜெயபிரகாஷ், கோ.ஆதிலட்சுமி, ஆ.முத்தம்மாள், க.ரேணுகா, க.வசந்தி, ப.சத்தியவதி மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

பி.அரிதாஸ் நன்றி கூறுகிறார்.



பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி தாம்பரம் மாநகராட்சி மண்டலம்–2க்கு உட்பட்ட 27 வது வார்டில் பொது மக்களின் கோரிக்கையை ஏற்று சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நியாய விலைக் கடை (ரேஷன் கடை) புதிய கட்டிடம் கட்ட மற்றும் தார் சாலை அமைக்கும் பணிகளை பல்லாவரம் இ.கருணாநிதி எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைத்தார். அப்பொழுது மண்டல தலைவர் பகுதி கழகச் செயலாளர் இ.ஜோசப் அண்ணாதுரை, மாமன்ற உறுப்பினர் மகேஸ்வரி கார்த்திகேயன் மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் சங்கர் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# வை. மகாவிஷ்ணு

### மே 10 (2007)



தனது இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

திருவொற்றியூர் நகரத்தில் தொடர்ந்து முப்பதாண்டுகள் வட்டச் செயலாளராக பொறுப்பு வகித்தவர்.

திருவொற்றியூர் நகர்மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

1987 இலங்கை தமிழர் ஆதரவு போராட்டம், 1991 ரயில் மறியல் போராட்டம் ஆகியவற்றில் கலந்து கொண்டு சிறை சென்றதோடு, கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**